**இணையதள விண்ணப்பம்**

# கல்வியியல் கல்லூரி

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

தொலைபேசி : 04362 - 227782,226720

**2012-13 இளம் கல்வியியல் (B.Ed.,) பட்டப்படிப்பில் சேர்வதற்குரிய விண்ணப்பப் படிவம்.**

| வங்கியின் பெயர் / ஊர் | வரைவோலை எண் / நாள் | தொகை |
|---|---|---|
| | | |

| அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் | | |
|---|---|---|
| பாடம் | பெற்ற மதிப்பெண்கள் | ஒதுக்கீடு |
| | | |

பாஸ்போர்ட் அளவு புகைப்படம் அதன் மேல் மாணவர் கையொப்பம் இடவேண்டும்

(விண்ணப்பதாரர் கையேட்டில் உள்ள விவரங்களைப் படித்தப்பின் பூர்த்தி செய்யவும்)

முதன்மைப் பாடம் [ ]

முதன்மைப் பாட குறியீட்டு எண் [ ] (பக்கம் 4 ஐ பார்க்கவும்)

1. விண்ணப்பதாரர் பெயர்

   அ) தமிழ் [ ]

   ஆ) ஆங்கிலம் (பெரிய எழுத்துக்களில்) [ ]

2. பிறந்த தேதி [ ]

3. பாலினம் ஆண் [ ] பெண் [ ]  4. தமிழ்நாட்டைச் சார்ந்தவரா? ஆம் [ ] இல்லை [ ]

5. நாடு [ ]  6. மதம் [ ]

7. இனம் தாழ்த்தப்பட்டோர் [ ] அருந்ததியினர் [ ] பழங்குடியினர் [ ] மிபிவ [ ] பிவ [ ]

   பிவமு [ ] இதர வகுப்பினர் [ ]

8. தமிழ்வழியில் கற்றவரா? ஆம் [ ] இல்லை [ ]

9. பெற்றோர் / பாதுகாவலர் / கணவர் பெயர் [ ]

   தொழில் [ ]

10. விண்ணப்பதாரர் தொடர்பு முகவரி

    பெயர்

    மாவட்டம்

தொலைபேசி எண் :

அஞ்சல் குறியீட்டு எண் :

11 . கல்வித் தகுதி

அ) 10 - ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டும் [ ]

ஆ) மேல்நிலைப் பள்ளி படிப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டும் [ ]

| இ) பட்டம் | முதன்மைப் பாடம் | பல்கலைக்கழகம் | தேர்ச்சி பெற்ற ஆண்டு | பகுதி III இன் மொத்த மதிப்பெண்கள் (முதன்மை, துணைமை, எழுத்துத்தேர்வு , செய்முறைத் தேர்வு) | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்ற மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்கள் |
| பி,லிட் / பி,ஏ / பி,எஸ்சி | | | | | |

பகுதி III இல் பெற்ற விழுக்காடு (புள்ளிக்குப் பின் நான்கு எண்கள்) [ ][ ] • [ ][ ][ ][ ]

**குறிப்பு: விழுக்காட்டை துல்லியமாகக் கணக்கிட்டு குறிக்கவும். கூடுதலாக விழுக்காடு குறிப்பிடப்பட்டிருப்பின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.**

12. உயர்கல்வித் தகுதி

எம்.ஏ / எம் .எஸ்சி [ ] தேர்ச்சி பெற்ற ஆண்டு [ ]

எம். ஃ பில் [ ] தேர்ச்சி பெற்ற ஆண்டு [ ]

பிஎச்.டி [ ] தேர்ச்சி பெற்ற ஆண்டு [ ]

13. அ. கல்லூரி அளவில் நாட்டு நலப்பணித் திட்டத்தில் (NSS) இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்து 7 நாட்களுக்குக் குறையாமல் சிறப்பு முகாம் சான்றிதழ் பெற்றவரா? ஆம் [ ] இல்லை [ ]

ஆ. தேசியப் பாதுகாப்புப் படை மாணவராக இருந்து (NCC) கல்லூரி அளவில் C அல்லது B சான்றிதழ் பெற்றவரா ? ஆம் [ ] இல்லை [ ]

இ. கல்லூரியில் பயின்றபோது மாநில அளவில்/ தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றவரா ? ஆம் [ ] இல்லை [ ]

ஈ. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவரா?/ பொங்கல் விழாப் போட்டிகளில் பங்கேற்றவரா ? ஆம் [ ] இல்லை [ ]

14. முன்னாள் படைவீரரின் மகனா/மகளா? ஆம் [ ] இல்லை [ ]

15. மேல்நிலைப் பள்ளியில் பகுதி 1 இல் தமிழைப் பயின்றவரா ? ஆம் [ ] இல்லை [ ]

16. மாற்று திறனாளியா?(Differently Abled Persons) ஆம் [ ] இல்லை [ ] ஆம் எனில் விழுக்காடு [ ]

பார்வையற்றவரா? ஆம் [ ] இல்லை [ ] ஆம் எனில் விழுக்காடு [ ]

விண்ணப்பத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளவை அனைத்தும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனப் பின்னர் தெரிய வந்தால் என் சேர்க்கை நீக்கத்திற்குள்ளாகும் என நன்கு அறிவேன்.

இடம் :

நாள் : பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம் விண்ணப்பதாரர் கையொப்பம்

**பட்ட வகுப்பில் பகுதி-III ல் பெற்ற மதிப்பெண்கள் விவரப் பட்டியல்.**

பட்ட வகுப்பில் பயின்ற முதன்மைப் பாடம்: பயின்ற பல்கலைக்கழகம் : பதிவு எண் :
தேர்ச்சி பெற்ற மாதம், ஆண்டு :
இளநிலைப் பட்டப் படிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளின் முதன்மை, துணைமைப் பாடங்களின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் (பகுதி III)

| வ.எண் | *பாடக்குறியீடு* | பெற்றமதிப்பெண்கள் (பெ.ம) | உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் (உ.ப.ம) | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | **கூடுதல்** | | | |

பகுதி III ல் விழுக்காடு = (பெ.ம) / (உ.ப.ம) X 100 =

(நான்கு தசம திருத்தமாக)

| | | • | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

விண்ணப்பதாரர் கையொப்பம்

பயின்ற துறையின்
ஆசிரியர் சான்றொப்பம்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**(தேசியத் தர மதிப்பிட்டுக் குழுவின் B++ தரம் பெற்றது)**

## தஞ்சாவூர் - 613 010

**இளம் கல்வியியல் முழுநேரம்**

**Bachelor of Education Regular (B.Ed.)**

(தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின்அங்கீகாரம் பெற்றது)

## விண்ணப்பம் மற்றும் சேர்க்கைக் கையேடு

Application and Prospectus

2012 – 2013


தமிழ்ப் பல்கலைக்கழகம்

வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613 010

தொ.பே 04362 - 227782, 226720

www.tamiluniversity.ac.in


விலை ரூ 600/- மட்டும்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்


## கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, கல்வியியல் கல்லூரி

தொலைபேசி 04362-227782,226720

## தஞ்சாவூர் - 613 010


# 2012 - 13 இளம் கல்வியியல் முழுநேரம் (B.Ed.) பட்டப் படிப்பு

# சேர்க்கைக் கையேடு (PROSPECTUS)

### தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர்நிலை ஆய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. இப் பல்கலைக்கழகம் தஞ்சை நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதியப்பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஏறத்தாழ 900 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். இப் பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களின் கீழ் இருபத்து ஐந்து துறைகள் செயல்பட்டுவருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளிலும் முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகள் உள்ளன. பல்துறை ஆய்வுகளும் ஊக்குவிக்கப்படுகின்றன.

மேலும், பாராளுமன்ற வடிவமைப்பில் உயர்நிலை ஆய்வுக்கு உறுதுணையாக ஒரு நூலகம் அமைந்துள்ளது. இதில் 134466 நூல்களும் 334 பருவ இதழ்களும் ஆய்வுப் பயன்பாட்டிற்கு இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள் அனைத்தும் கணிப்பொறி வசதியைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தத்தம் துறைகளில் சிறப்பான பட்டங்களையும், பயிற்சிகளையும் ஆய்வு அனுபவங்களையும் பெற்றுள்ளதுடன் அரிய பல ஆய்வு நூல்களையும் எழுதி அளித்துள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்காகவும் பயிற்சிக்காகவும் கணிப்பொறி அறிவியல் துறை செயல்படுகிறது. இத்துறையில் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் இணைய தள இணைப்பும் உள்ளது. முதுநிலை மாணவர்கள் நாட்டு நலப்பணித்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

2006 - 2007 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டுப் பல்வேறு செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வினையொட்டி இரு புதிய துறைகள் தொடங்கப்பட்டன. மேலும் 2006 - 2007 கல்வியாண்டு முதல் தெரிவு அடிப்படை மதிப்பெண் முறை (CBCS) செயல்படுத்தப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கென வேலைவாய்ப்பு வழிகாட்டும் மையம் செயல்படுகிறது. மாணவர்கள் குறைதீர்க்கும் அமைப்பும், முன்னாள் மாணவர்கள் அமைப்பும் மாணவர்கள் நலன் கருதிச் செயல்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதி வசதி உள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசிய தரமதிப்பீட்டுக் குழுமம் (NAAC) B++ தரம் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக நல்கைக்குழு பல்வேறு திட்டங்களும் கல்வி உதவித் தொகைகளும் ICCR, ICHR, ICPR போன்ற இந்திய ஆய்வுக்கழகங்கள் மூலம் பல்வேறு திட்டங்களுக்குக் கூடுதல் நிதியுதவியும் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**துறைகள்**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் துறைகள் உள்ளன.

1.சிற்பத்துறை, 2. இசைத்துறை, 3. நாடகத்துறை

4. ஓலைச்சுவடித்துறை , 5.அரிய கையெழுத்துச்சுவடித்துறை,

6. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை, 7. நீரகழாய்வு மையம்

8. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, 9. மொழிபெயர்ப்புத்துறை

10. அகராதியியல் துறை, 11. சமூக அறிவியல் துறை,

12. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை,

13. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, 14. இலக்கியத்துறை

15. மொழியியல்துறை, 16. தத்துவ மையம்

17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம் , 18. நாட்டுப்புறவியல் துறை

19. இந்தியமொழிகள் பள்ளி , 20. சித்த மருத்துவத்துறை

21. தொல்லறிவியல் துறை . 22. தொழில் மற்றும் நில அறிவியல் துறை

23. கட்டடக்கலைத்துறை, 24. கணிப்பொறி அறிவியல் துறை

25. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை.

## கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

## (Department of Education and Management)

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை 2007-2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது.

இந்துறையில் கீழ்வரும் படிப்புகள் உள்ளன.

1. முனைவர் பட்டம் (கல்வியியல்) — முழுநேரம் / பகுதி நேரம்
2. ஆய்வியல் நிறைஞர் பட்டம் (கல்வியியல்) — முழுநேரம் / பகுதி நேரம்
3. இளங்கல்வியியல் பட்டம் (கல்வியியல் கல்லூரி) — முழுநேரம்

இத்துறையில் முழுநேர/பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வினை 54 ஆய்வாளர்களும், முழுநேர/ பகுதிநேர ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வினை 76 ஆய்வாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர். இத்துறையில் 22 முழு நேர / பகுதி நேர ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் படிப்பினை நிறைவு செய்துள்ளனர்.

**கல்வியியல் கல்லூரி**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறையின், கல்வியியல் கல்லூரி 2007 - 2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அறிந்தேற்புப் பெற்றுள்ளது. இதில் இளங்கல்வியியல் ஓராண்டு முழுநேரப் பட்டப்படிப்பு இருபாலருக்கும் வழங்கப்படுகிறது. கல்வியியல் கல்லூரியில் 100 மாணவ, மாணவிகள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் சேர்க்கப்படுகின்றனர். உயர் கல்வித்தகுதிகள் கொண்ட பேராசிரியர்களால் வகுப்புகள் சிறப்பான முறையில் நடத்தப்படுகின்றன. நன்கு வசதி படைத்த ஆய்வகங்கள், நூலகம் உள்ளன. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களது அனுமதியோடு அருகில் உள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பான முறையில் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்படுகிறது. உடற்கல்வி, சமூகப்பணி போன்ற பாட இணைச்செயல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம் மூலம் 2007-2008 கல்வியாண்டில் இளங்கல்வியியல் வகுப்பில் பயின்ற பயிற்சி ஆசிரியர்களில் 61 நபர்களும், 2008 - 2009 கல்வியாண்டில் 69 பேர்களும் வளாக நேர்காணலில் (Campus interview) தெரிவு செய்யப்பட்டு பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**இளங்கல்வியியல் 2012 - 13 கல்வியாண்டுச் சேர்க்கை**

2012 - 13 ஆம் கல்வியாண்டில், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பிற்கு இருபாலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சேர்கைக்கான விண்ணப்பப்படிவங்கள் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை அனைத்து வேலை நாட்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைப் பிரிவில் வழங்கப்படும். விண்ணப்பத்தினை நேரில் பெற விரும்புவோர் ரூ.600/- ஐ பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட / பழங்குடி வகுப்பினருக்கு ரூ.300/- (சாதிச் சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல் அளிக்க வேண்டும்). விண்ணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் The Registrar, The Tamil University. Thanjavur - 613 010 என்ற பெயரில் தஞ்சாவூரில் காசாக்கும் வகையில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட ரூ.650 / 350 க்கான கேட்பு வரைவோலையுடன் (Demand Draft payable at Thanjavur) தன் முகவரியிட்ட A4 அளவுள்ள உறையைச் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்யும் முன்பு விவரக் கையேட்டை (Prospectus) தெளிவாகப் படிக்க வேண்டும்.

**பி.எட்.பட்டப் படிப்பில் சேருவதற்குரிய பாடங்கள்**

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் கீழ்க்காணும் பாடப் பிரிவுகளில் சேர்க்கை நடைபெறும்.

| முதன்மைப் பாடக் குறியீட்டு எண் | பாடம் |
|---|---|
| 01 | தமிழ் |
| 02 | ஆங்கிலம் |
| 03 | கணிதம் |
| 04 | பொருளறிவியல் (இயற்பியல் மற்றும் வேதியியல்) |
| 05 | உயிரறிவியல் (விலங்கியல் மற்றும் தாவரவியல்) |
| 06 | வரலாறு |
| 07 | புவியியல் |

மேலும் கீழ்க்காணும் இளநிலைப் பட்டம் பெற்ற மாணவர்களும் அதற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பி.எட். விருப்பப்பாடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

1. பயன்பாட்டுக் கணிதம் (Applied Mathematics) - கணிதம் (Mathematics)

2. பயன்பாட்டு இயற்பியல் (Applied Physics)

புவி இயற்பியல் (Geo - Physics)

உயிரி இயற்பியல்(Bio-physics),மின்னணுவியல் (Electonics) - பொருளறிவியல் (Physical Science)

உயிரி வேதியியல் (Bio - Chemistry)

பயன்பாட்டு வேதியியல் (Applied chemistry)

நுண்ணுயிரியல் (Micro-Biology)

தாவர உயிரியல் (Plant Biology) - உயிரறிவியல் (Biological Science)

சுற்றுச்சூழல் அறிவியல் (Environmental Science)

உயிரி நுட்பவியல் (Bio-technology)

1. பயன்பாட்டுப் புவியியல்(Applied Geography) - புவியியல் (Geography)
2. இந்தியப் பண்பாடு (Indian culture) - வரலாறு (History)

**சேர்க்கைக்கான கல்வித் தகுதிகள்**

இளம் கல்வியியல் சேர்க்கைக்கான தமிழக அரசின் விதி முறைகளின்படி சேர்க்கை நடைபெறும்.

மேற்கண்ட பாடங்களுள் ஒன்றைத் தேர்வு செய்யும் விண்ணப்பதாரர் அப்பாடத்தினை இளநிலைப் பட்டப் படிப்பில் (UG Degree) முதன்மைப் பாடமாகக் (Major Subject) கொண்டு படித்திருத்தல் வேண்டும்.

10+2+3 என்ற கல்வி முறையில் பயின்றவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

இளநிலைப் பட்டப் படிப்பில் இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களைப் (Double or Triple Major) பயின்றிருந்தால் அவற்றுள் ஏதேனும் ஒரு முதன்மைப் பாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

இளநிலைப் பட்டதாரிகள், இட ஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்காணும் விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே விண்ணப்பிக்கவும்,

| **இனம்** | **மதிப்பெண் விழுக்காடு** |
|---|---|
| இதர வகுப்பு (O.C) | 50% |
| பிற்பட்ட வகுப்பு (B.C) | 45% |
| மிகவும் பிற்பட்ட வகுப்பு (M.B.C) | 43% |
| தாழ்த்தப்பட்ட, அருந்ததியினர் மற்றும் பழங்குடி வகுப்பு (SC / ST) | 40% |

மாற்று திறனுடையோர் (Differently Abled Persons) மற்றும் பார்வையற்றோர் இளநிலைப்பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருந்தாலே விண்ணப்பிக்கலாம்.

**இட ஒதுக்கீடு**

இன இட ஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்காணும் விழுக்காட்டில் சேர்க்கை நடைபெறும்.

| ***இனம்*** | ***மதிப்பெண் விழுக்காடு*** |
|---|---|
| *பொதுப் போட்டி (O.C)* | *31%* |
| *பிற்பட்ட வகுப்பு (B.C) ,முகமதியர்* | *30% (26.5+3.5)* |
| *மிகவும் பிற்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (MBC/DNC)* | *20%* |
| *தாழ்த்தப்பட்ட வகுப்பு (SC), அருந்ததியினர் (SCA)* | *18% (15+3)* |
| *பழங்குடியினர் வகுப்பு (ST)* | 1% |

தமிழ்நாட்டுக் குடிமக்கட்கு மட்டுமே இந்த இன ஒதுக்கீடு பொருந்தும்.

முன்னாள் படை வீரரின் மகன் / மகளுக்கென ஓரிடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாற்று திறனுடையோர்களுக்கு (Differently Abled Persons) 3 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்படும். (உடற் குறைபாடு மற்றும் பார்வை குறைபாடு)

**விண்ணப்பத்தை நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்**

விண்ணப்பதாரர் தமது மதிப்பெண் விழுக்காட்டினைத் தெளிவாக, துல்லியமாகக் கணக்கிட்டு எழுதவேண்டும்.

பல்கலைக்கழக மதிப்பெண் பட்டியலில் உள்ள பகுதி மூன்றின் (Part - III) மதிப்பெண்களை அப்படியே கூட்டி, பின்பு கூடுதல் மதிப்பெண்ணிற்கு விழுக்காடு கணக்கிடப்பட வேண்டும்.

இளநிலைப் பட்டப் படிப்பில் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளின் முதன்மை, துணைமைப் பாடங்களின் எழுத்து மற்றும் செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டை மட்டுமே (பகுதி I, பகுதி II, பகுதி IV, பகுதி V மதிப்பெண் விழுக்காடு சேர்க்கைக்கு ஏற்கப்படமாட்டாது) சேர்கைக்கான அடிப்படை மதிப்பெண்ணாக ஏற்றுக்கொள்ளப்படும். **இளநிலைப் பட்டப் படிப்பில் பகுதி மூன்றில் பெற்ற மதிப்பெண் விழுக்காட்டினை விண்ணப்பத்தில் குறிக்க வேண்டிய இடத்தில் நான்கு இலக்கப் பின்னங்களில் தெளிவாக எழுத வேண்டும். (எ.கா. 75.1617)**

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் குறிப்பிட்ட தேதிக்குள் அளிக்கப்படாவிட்டாலும், வரையறுக்கப்பட்ட வடிவத்தில் இல்லையென்றாலும், முழுமையாக நிறைவு செய்யப்படாமல் இருந்தாலும், தவறான தகவல்கள் மற்றும் தவறான மதிப்பெண்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், சான்றொப்பம் (Attested) இடப்பட்ட இனச்சான்றிதழின் நகல் இணைக்கப்படாவிட்டாலும், அறிவுறுத்தியவகையில் முழுமையாகப் நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளது எனக் கருதப்பட்டாலும் எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் இது தொடர்பாக மேற்கொண்டு எந்தவிதத் தொடர்பும் கொள்ள வேண்டாம் எனவும் தெரிவிக்கலாகிறது.

**தர வரிசைக்கான முறைகள்**

இளநிலைப் பட்டபடிப்பில் மூன்று ஆண்டுகளிலும் பெற்ற முதன்மை மற்றும் துணைமைப் பாடங்களின் எழுத்து மற்றும் செயல்முறைத் தேர்வு மதிப்பெண்கள் மட்டுமே (பகுதி 3) தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களை இளநிலைப் பட்டப் படிப்பில் பயின்றிருப்பின் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தெரிவு செய்யும் முதன்மைப் பாடத்தின் மதிப்பெண்கள் சராசரி மட்டுமே தரவரிசைக்கு உட்படுத்தப்படும்.

ஐந்து ஆண்டுகள் ஒருங்கிணைந்த (Integrated - PG course) முதுநிலைப் பட்டப்படிப்பாக இருந்தால், முதல் மூன்று ஆண்டுகட்கு உரிய பகுதி மூன்றின் மதிப்பெண்கள் மட்டும் தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**4. உயர்கல்வித் தகுதிக்கு உரிய கூடுதல் மதிப்பெண்கள் கீழ்க்காணுமாறு அளிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| முதுநிலைப்பட்டம் (P.G) | - | 4 மதிப்பெண் |
| ஆய்வியல் நிறைஞர் பட்டம்(M.Phil.,) | - | 5 மதிப்பெண் (4+1) |
| முனைவர் பட்டம் (Ph.D.,) | - | 6 மதிப்பெண் (4+1+1) |

- ஒருவருக்கு உயர்கல்வித் தகுதிக்குரிய கூடுதல் மதிப்பெண்ணாக அதிகஅளவு 6 மதிப்பெண்கள் மட்டுமே அளிக்கப்படும்.

- இளநிலைப் பட்டப் படிப்பில் முதன்மைப் பாடமாகக்கொண்டு பயின்ற, அதே பாடத்தில் உயர்கல்வித் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே மேற்கண்டவாறு கூடுதல் மதிப்பெண் வழங்கப்பெறும்.
- கீழ்க்காணும் பாட இணைச் செயல்களில் (Co-Curricular Activities) ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் கூடுதலாக 3 மதிப்பெண்கள் வழங்கப்பெறும்.

அ. கல்லூரி அளவில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நாட்டு நலப்பணித் திட்ட (N.S.S.) உறுப்பினராக இருந்ததுடன் 10 / 7 நாள்கள் சிறப்பு முகாமில் கலந்து கொண்டமைக்கான சான்று.

ஆ. என்.சி.சி. (N.C.C) கல்லூரி அளவில் பி அல்லது சி சான்று (B or C grade).

இ. கல்லூரியில் பயின்றபோது மாநில அல்லது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றமைக்கான சான்று.

ஈ. தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட (N.S.S) உறுப்பினராக இருந்தமைக்கான சான்றிதழ் / தமிழ்ப் பல்கலைக்கழகப் பொங்கல் விழாப் போட்டிகளில் பங்கேற்றமைக்கான சான்றிதழ்.

**கலந்தாய்விற்கு அழைத்தல்**

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தர வரிசை, தமிழ்நாடு அரசின் இன ஒதுக்கீட்டு அடிப்படையில் கலந்தாய்விற்குத் தற்காலிகமாக விண்ணப்பதார்கள் அழைக்கப்படுவார்கள். கலந்தாய்வின் முடிவில் விண்ணப்பதாரரின் தெரிவு மற்றும் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

கலந்தாய்விற்குக் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் வராதவர்களின் தெரிவு ஏற்கப்பட மாட்டாது. கலந்தாய்வின்போது சான்றிதழ் சரிபார்த்தலுக்கும், அதன் பிறகு சேர்க்கையின்போதும் சான்றிதழ்களை வழங்க வேண்டும். கலந்தாய்விற்கு வரும் விண்ணப்பதாரர், நிரந்தர இனச்சான்றிதழ் அட்டையுடன் (Permanent Community Card) வரவேண்டும். பழங்குடி இனத்தவராயின் (ST) தங்கள் சொந்த ஊரின் வருவாய்க் கோட்ட (RDO) அல்லது மாவட்ட ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட இனச் சான்றிதழைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரசு மருத்துவ அதிகாரியிடம் இருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழை அளிக்க வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றிகழ்கள்**

அ. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

ஆ. பட்ட வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் பட்டச் சான்றிதழ்

இ. முதுகலை / எம்.ஃபில் / பி.எச்டி மதிப்பெண் சான்றிதழ் மற்றும் பட்டச் சான்றிதழ்

ஈ. இனச் சான்றிதழ்

உ. என் சி.சி (சி/பி) என்.எஸ்.எஸ் 10 நாள் சிறப்பு முகாம் சான்றிதழ், தேசிய / மாநில அளவிலான விளையாட்டுச் சான்றிதழ், தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட சான்றிதழ் / பொங்கல் விழா விளையாட்டுச் சான்றிதழ்.

ஊ. முன்னாள் இராணுவத்தினர் மகன் அல்லது மகள் என்பதற்கான சான்றிதழ் / மாற்றுத் திறனுடையோர் ( Differently Abled Persons) சான்றிதழ்.

மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும்.

**கடைசி தேதிக்குள் இணைக்கப்பட்ட சான்றிதழ்களுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.**

விண்ணப்பத்தில் **வரிசை எண் 12,13** இவற்றிற்கு உரிய சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே **உரிய கூடுதல் மதிப்பெண்கள்** வழங்கப்படும்.

**நிறைவு செய்த விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.**

விண்ணப்ப விற்பனை கடைசி நாள். 06.07.2012 பிற்பகல் 4.30 மணி

விண்ணப்பம் வர வேண்டிய கடைசி நாள். 06.07.2012 பிற்பகல் 5.30 மணி

**நிறைவு செய்த விண்ணப்பத்தினை மீள அனுப்ப வேண்டிய முகவரி**

**பதிவாளர்(பொ) அவர்கள்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010**